<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 164 / 2023</u>**

வா.சா.1. கணேசன் 19.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரங்களை எனது வழக்கறிஞருக்கு யார் சொன்னார்கள் என்றால் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் இந்த வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றும் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கந்துவட்டி தொழில் செய்து வருவதால அந்த விபரத்தை பிராதில் சொன்னால் இந்த வழக்கிற்கு எதிராகிவிடும் என்பதால் அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார் என்ற விபரத்தை கூட நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். தற்போது நான் சொல்வது தவறு என்றும் நான் திட்டமிட்டு மாற்றி சாட்சியம் அளித்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதையும் பிரமாண பத்திரிக்கையையும் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பிரதிவாதி எனது பெயருக்கு புரோநோட்டு எழுதிக் கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு பிராதில் சொல்லவில்லை என்றும் தற்போது மாற்றி சொல்லியுள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதி எந்த தேதியில் 7 இலட்சம் கடன் பெற்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொல்லியுள்ளேன். அதேபோன்று நிருபண வாக்குமூலத்திலும் புரோநோட்டு யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. 03.10.2021க்கு முன்பு எனக்கும் பிரதிவாதிக்கும் கொடுக்கல் வாங்கல் வங்கி பரிவர்த்தனை உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட விபரங்களை இந்த வழக்கில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் பிரதிவாதியிடம் அசல் மற்றும் வட்டியை திரும்பி செலுத்துமாறு நான் தாக்கல் செய்த பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோன்று சில நபர்களின் மூலம் கடனை திரும்பி செலுத்துமாறு கேட்டதாக சொல்லியுள்ள நான் எந்த நபர்கள் மூலம் கேட்டேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா கடனை 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யலாம் என்றும் ஆனால் இந்த புரோநோட்டு 1 வருடம் 7 மாதம் கழித்து தாக்கல் செய்துள்ளதால் அதற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு முன்னறிவிப்பு அனுப்பாததற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு எந்தவித பணம் கொடுக்க தேவையில்லை என்றும் அதன் காரணமாக தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு நான் உடன்ஜப்தி செய்வதற்கு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து அவரது அப்பா பெயரில் உள்ளது. பிரதிவாதி பெயரில் இல்லாத சொத்தை பிரதிவாதி பெயரில் இருப்பதாக குறிப்பிட்டு நான் நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டை சண்முகம் என்பவர் எழுதினார். சண்முகத்தின் அப்பா பெயர் பொன்னுச்சாமி. தாவா புரோநோட்டை பொன்னுச்சாமி என்பவர் எழுதியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் சொல்வது தவறு என்றும் சொன்னால் சரிதான். ஏற்கனவே எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் மூலம் பெறப்பட்ட புரோநோட்டு, காசோலை மற்றும் ஆவணங்களை வைத்துக்கொண்டு நான்இந்த வழக்கை அவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாமிநாதன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது உடன்பிறந்த சகோதரர் சாமிநாதன் பிரதிவாதிக்கு எதிராக பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நிறைய பக்கம் கடன் வாங்கியிருந்தால் அவரவர் அவர் பக்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 5, 6 நபர்களிடம் பிரதிவாதி கடன் வாங்கினார் என்று சொல்லும் நான் யார் யாரிடம் கடன் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் கடன் வாங்கியது தான் தெரியும். பிரதிவாதி 03.10.2021க்கு முன்பு என்னிடம்வாங்கிய கடனுக்கான ஆவணங்களை வைத்து தான் நான் எனது அண்ணன் மற்றும் மைத்துனர் வைத்து பல்வேறு வழக்குகளை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளோம் என்றும் பிரதிவாதி 03.10.2021க்கு பின்னிட்டு எந்த கடனும் வாங்கவில்லை என்றும் எந்த புரோநோட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் நான் கொடுத்த கடனை திரும்ப பெற்ற பின்பு நான் அவரை அச்சுறுத்தியதன் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. அதற்கு பின்பும் நாங்கள் அச்சுறுத்தியதால் அவர் தற்கொலை செய்ய முயற்சித்தார் என்றால் சரியல்ல. அதன்பின்பு பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் பிரதிவாதியின் மனைவி மதுரை கூடல்புதூர் காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் ஆஜர் ஆகி வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் ஆஜராகவில்லை, வாக்குமூலம் கொடுக்கவில்லை. நான் காவல் நிலையம் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்றும்

தற்போது ஆஜராகவில்லை என்றும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 03.10.2021-ம் தேதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றும் அதனால் பிரதிவாதி எனக்கு கடனை திரும்பி செலுத்த கடமைப்பட்டவா் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வாதிக்கு பிரதிவாதி அசல் 6 இலட்சம் என்று பரிகார காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வியாஜிதமூலத்தில் பிரதிவாதிகள் கடனாக பெற்ற தொகை 7 இலட்சம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் எத்தனை பிரதிவாதிகள் இந்த வழக்கில் உள்ளார்கள் என்றால் சக்கரவர்த்தி ஒருவர் மட்டும் தான் உள்ளார். வா.சா.ஆ,1 தாவா புரோநோட்டில் தலைப்பகுதியில் 7 இலட்சம் என்று எழுதப்பட்டுள்ளதில் கடைசியாக உள்ள பூஜ்ஜியம் 3வது பூஜ்ஜியத்திற்கு மேலே போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டில் தமிழ் வருடம் மாதம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 03.10.2021-ம் தேதி புரோநோட்டு எழுதப்பட்டு இருந்தால் அந்த தேதிக்கான தமிழ் மாதம், வருடம் எழுதப்பட்டு இருக்கும் என்றும் பின்னிட்டு தாவா புரோநோட்டு பூர்த்தி செய்யப்பட்டதால் தான் அதற்கான தமிழ், தேி, மாதம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியின் கைரேகை அல்ல என்றால் சரியல்ல. நான் அதற்கு புகைப்படம் எடுத்து வைத்துள்ளேன் என்று சாட்சியம் அளிக்கிறாா். பிரதிவாதி என்னிடம் உண்மையிலேயே கடன் வாங்கியிருந்தால் நான் புகைப்படம் எடுத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கையெழுத்து போட்ட போது எடுத்ததாக சொல்லும் புகைப்படத்தை நான் ஏற்கனவே ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அன்றைக்கு தேவைப்படவில்லை. அதனால் போடவில்லை. அந்த புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் கையெழுத்து மட்டும் புரோநோட்டு பூர்த்தி செய்யாமல் இருப்பது தெரிய வரும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தூண்டுதலின் பேரில் தான் எனது சகோதரா் சாமிநாதன், சுரேஷ் ஆகியோா்கள் பிரதிவாதிக்கு எதிராக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி கார்த்திக், சுரேஷ், சாமிநாதன் ஆகியோரிடம் வாங்கிய கடனுக்காக அவரவா் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். ஏற்கனவே நான் குறுக்கு விசாரணையின் போது பிரதிவாதி யாா் யாரிடம் கடன் வாங்கினாா் என்ற விபரம் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நான் தற்போது கார்த்திக், சுரேஷ் மற்றும் சாமிநாதன் ஆகியோா்களிடம் கடன் வாங்கி வழக்கு தாக்கல் செய்துள்ளாா் என்று சொல்லும் நான் அவா்களை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தான் அவா்கள் பெயரை நான் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்வது போல் பிரதிவாதி

என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் எந்த புரோநோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(03.10.2021க்கு முன்பு எனக்கும் பிரதிவாதிக்கும் கொடுக்கல் வாங்கல் வங்கி பரிவர்த்தனை உள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அது குறித்து வாதி தரப்பில் மறுவிசாரணை செய்யப்பட வேண்டும என்று கோரப்பட்டது. ஆனால பிரதிவாதி தரப்பில் வா.சா.1-ல் பதில் அளிக்கப்பட்ட பதில் இரண்டு அர்த்தங்கள் தரக்கூடிய பதில் இல்லை என்பதால் மறுவிசாரணைக்கு வாய்ப்பு அளிக்க கூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனை செய்து மறுவிசாரணை மறுக்கப்பட்டது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.20 10:17:44 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்